**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 12/2023**
**Prosecution Witness**:6

| | | | |
|---|---|---|---|
| Name | **சசி என்கிற சக்திவேல்** (PW6) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of March 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி, காந்திஜி தெருவில் குடியிருந்து கொண்டு பேரூராட்சி ஒப்பந்ததாரராக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 மருதாசலத்தை தெரியும். கடந்த 29.06.2022ம் தேதி நானும் எனது நண்பர் அண்ணாதுரை என்பவரும் இருசக்கர வாகனத்தில் அரிசி வாங்குவதற்காக சென்று அம்மன்கோவில் நல்லப்பா ரைஸ்மில் அருகில் நின்று கொண்டிருந்தபோது காலை 07.15 மணி சுமாருக்கு நல்லப்பா ரைஸ்மில்லிற்கு சற்று தொலைவில் கூட்டமாக இருந்தது, நான் சென்று என்னவென்று பார்த்தபோது கொடுமுடி - சிவகிரி செல்லும் சாலையில் ஒரு லாரி நின்று கொண்டிருந்தது, மருதாசலம் மகன் கிரண் அடிபட்டு கிடந்தார். கிரண் இருசக்கர வாகனத்தில் வந்ததாக சொன்னார்கள். கிரண் லாரி மோதி அடிபட்டதாக சொன்னார்கள். லாரியின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

நான் போலீசார் விசாரணையின்போது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் சொன்னேன் என்றால் சரிதான். இறந்துபோன கிரணின் அப்பா மருதாசலம் எனக்கு ஒரே ஊர்க்காரர், நண்பர். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள், மருதாசலம் கேட்டுக்கொண்டதன் பேரிலும், போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரிலும் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.10 09:02:36 +0530

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 09:02:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 12/2023**
**Prosecution Witness**:7

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜா (PW7) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of March 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது அரச்சலூர், கண்ணம்மாபுரத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம், கரும்பு ஆலை மற்றும் லாரி தொழில் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமான TN 33 AU 7490 என்ற எண்ணுள்ள அசோக் லைலேண்டு லாரியை 29.06.2022ம் தேதி புகளூருக்கு கரும்பு லோடு ஏற்றி சென்று இறக்கிவிட்டு தாமரைபாளையத்தில் இருந்து விளக்கேத்தி வழியாக திரும்பி வந்து கொண்டிருந்தபோது அம்மன்கோவில் அருகில் உள்ள ரைஸ்மில் என்ற இடத்தில் விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், ஒரு பையன் அடிபட்டுவிட்டதாகவும் காலை 07.40 மணிக்கு ஆஜர் எதிரியான அரச்சலூர் வடபழனியை சேர்ந்த வேலுசாமி எனக்கு போன் மூலம் தகவல் கொடுத்தார். நான் அவரிடம் காவல்நிலையம் சென்று பார்த்துக்கொள்ளலாம் என்று கூறினேன். லாரியில் அடிபட்ட பையன் இறந்துவிட்டார். போலீசார் என்னை 01.07.2022ம் தேதி அன்று விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

லோடு ஏற்றிசென்று வரும்போது டிரிப் சீட்டு பராமரிப்போம் என்றால் சரிதான்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.10 09:02:55 +0530

அந்த டிரிப் சீட்டில் ஓட்டுநர் பெயர் உள்ளது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி டிரிப் சீட்டை போலீசாரிடம் ஆஜர்படுத்தினேனா என்றால் என்னிடம் இல்லாததால் நான் ஆஜர் படுத்தவில்லை. சம்பவ இடத்திற்கு சென்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 09:03:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.